இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம் தெற்குவெங்காநல்லூர் ஊராட்சி
தலைவர் / செயல் அலுவலரின் நடவடிக்கைகள்

முன்னிலை .. திரு.K.இசக்கிராஜா

வீட்டுமனைப்பிரிவு அனுமதி எண்.01/2024 நாள்..07.02.2024

பொருள்.. குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் – இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம் தெற்குவெங்காநல்லூர் ஊராட்சி – புதுப்பாளையம் கிராமம் சர்வே எண்கள்.209/1B, 209/2B, 210/2C2, 211/3B ஏக்கர் 1 செண்ட் 24 பரப்பளவு இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் ஒப்புதல் வழங்கி உத்திரவிடல்.

பார்வை.. 1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் – விருதுநகர் அவர்களின் மடலும் ROC No.AMEBZ7Z8/2024/TCP

2. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் – விருதுநகர் மனைப்பிரிவு வரைபடி ஒப்புதல் LP/DTCP/VNR No.14/2024 நாள்..

உத்தரவு..

1. இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம் – தெற்குவெங்காநல்லூர் ஊராட்சி புதுப்பாளையம் கிராமம் சர்வே எண்கள்.209/1B, 209/2B, 21/02C2, 211/3B ஏக்கர் 1 செண்ட் 24 பரப்பளவு இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு தொழில் நுட்ப அங்கீகாரம் ஒப்புதல் பார்வை 1 ல் கண்ட கடிதத்தின்படி சில நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2 இராஜபாளையம் சார்பதிவக ஆவண எண்.410/2024 நாள் 25.01.2024 மூலம் பொது உபயோகத்திற்கான இடங்கள் மற்றும் சாலைகள் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3. பார்வை 1 ல் காணும் கடிதத்தின் நகர் ஊரமைப்புத் துறையின் முன் அனுமதி பெறப்படும் மேம்பாடுகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு கூராய்வு கட்டணம் ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் வீதம் ஏக்கர் 1 செண்ட் 24க்கு மொத்தம் ரூ.1,240/- (ரூபாய் ஆயிரத்து இருநூற்றி நாற்பது மட்டும்) ம் நிலப்பயன் மாற்றுக் கட்டணமாக சந்தை மதிப்பீட்டில் 3% வீதம் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மனுதாரரின் இடத்திற்கான சந்தை மதிப்பில் 3% வீதம் ஏக்கர் 1 செண்ட் 24க்கு 5022 சதுரமீட்டருக்கு ரூ.7,440/- (ரூபாய் ஏழாயிரத்து நானூற்றி நாற்பது)ம் நில பயன்மாற்றுக் கட்டணமாக மனுதாரர்களால் செலுத்தப்பட்டுள்ளது.

4. எனவே பார்வை (1)ல் கண்ட கடிதத்தில் அனுமதி அளிக்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதலின்படியும் இணைத்து வரப்பெற்றுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் அடிப்படையிலும் உரிய கட்டணங்கள் மனுதாரர்களால் செலுத்தப்பட்டுவிட்டது. இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம் தெற்குவெங்காநல்லூர் ஊராட்சி புதுப்பாளையம் கிராமம் சர்வே எண்கள். 209/1B, 209/2B, 21/02C2, 211/3B ஏக்கர் 1 செண்ட் 24 பரப்பளவு உள்ள மனைப்பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள சாலை மற்றும் பொதுப் பயன்பாடு இடங்கள் நீங்கலாக மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை இயக்குநரால் அனுமதிக்கப்பட்ட வரைபடத்தின்படி 1 முதல் 23 வரையிலான மனைகளுக்கு மட்டும் அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

5 பார்வை (1) ல் வண்ட கடிதத்தில் சொல்லப்பட்ட நிபந்தனைகள் முழுமையாக கடை பிடிக்கப்பட வேண்டும்.

இணைப்பு..

வரைபடம் மற்றும் நிபந்தனைகள்

தலைவர்
தெற்குவெங்காநல்லூர் ஊராட்சி
தெற்குவெங்காநல்லூர் ஊராட்சி

பெறுநர்..

M.A.தர்மராஜா

த/பெ அழகராஜா

5 கோட்டை தலைவாசல் தெரு, பளையபாளையம்,

இராஜபாளையம்.